முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1561

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
பிரணவ சித்திமிகு ராஜனே
சரவணச்சுடரேற்றி அருளும்
சற்குருவே சண்முகன் என் அவதார ஞானகுருவே
2. ஞானகுரு அரங்கன் உந்தனுக்கு
ஞான அறிவுரை ஆசி தன்னை
ஞானபண்டிதன் யானும் சோபகிருது சிலைதிங்கள்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 22 ம் நாள், 07.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
நாட்டிடுவேன் அரங்கனுக்கு சக்தி பெருக
3. சக்திபெருக அரங்கனோடு யானிருந்து
சகலதுமாய் கவனித்து வருதல் காண
பக்திகொண்டு அரங்கன் பாதம் பற்றி
பாருலகில் தீட்சைபெறும் மக்களுக்கு
4. சக்திகூடும் சரவணன் என்னருளாலே
சர்வபலமும் வந்து ஆற்றல்பெருகும்
சித்திமிகு அரங்கன் பிரணவக்குடில்
சிந்தைதெளிவு சிறப்பறிவு ஊட்டுவதோடு
5. உத்தமமாய் வரும் அன்பர்கள் வேண்டுதல்
உயர்வாய் அரங்கேறி அவரவர்க்கும் காரியவெற்றி சர்வபலமும்
ஆற்றிடுவேன் ஆரோக்கியம் ஆயுள்பலமும்
ஆற்றல்மிக்க ஞான வாழ்வும்
6. ஞான வாழ்வும் சித்திக்க பரிபூரண ஆசி
நாட்டிடுவேன் அரங்கன் தர்மத்தை
தானாக முன்வந்து உலகோர் ஏற்று தர்மத்தில் உதவி
தக்கபடி அரங்கன் பேரிலான கிளைகள் துவக்கி

7. விந்தைபட தர்மசேவை ஆற்றிட
விரைந்து ஆறுமுகப்பெருமான் என்அருளாசியோடு
சிந்தை தெளிவுகண்டு உலகோரெல்லாம்
செப்பிடுவேன் ஞானிகளாக மாறி அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–